## செய்தி அறிக்கை

மலேசிய முதலாளிகள், இந்தியத் தொழிலாளர்களை நடத்தும் முறை பற்றி இந்தியத் தூதரகம் அவ்வப்போது புகார்களைப் பெற்று வருகின்றது. இத்தகைய செயல்களைக் குறைப்பதற்கும், அவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும், இந்தியத் தூதரகம் தற்போது மலேசிய மனிதவள அமைச்சுடன் செயலாற்றி வருகின்றது. இவ்வேளையில் இந்தியத் தூதரகம், மலேசிய அரசாங்கத்தின் ஒத்துழைப்பிற்குத் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மலேசியாவில் பணிபுரியும் இந்தியத் தொழிலாளர்களை மோசமான வழியில் நடத்துவதாக புகார்கள் இந்தியத் தூதரகத்தை வந்து சேர்கின்றன. மலேசியாவின் சட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் மீறி நடக்கும் இந்த முறைகேடான நடவடிக்கையைத் தடுக்கும் வகையில், தகுந்த சான்றுகள் இருக்குமாயின் சம்பந்தப்பட்ட முதலாளிகளுக்கு இந்திய அரசாங்கம் வழங்கி வரும் சலுகைகளை மறுபரிசீலனைச் செய்யும் என்று இந்தியத் தூதரகம் முடிவு செய்துள்ளது.

இந்தியத் தூதரகம், மலேசிய முதலாளிகளிடம், இந்தியத் தொழிலாளர்களின் பாதுகாப்பையும், நலன்களையும் உறுதிபடுத்துவதற்கு, தங்களது முழு ஒத்துழைப்பை வழங்குமாறு, கேட்டுக் கொள்கிறது.